[1990 ஏப்ரல் 21

மாநில சட்டக் கமிஷன்.

* 7053 பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில சட்டக் கமிஷன் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாநிலச் சட்ட ஆணையம் அமைத்தல் தொடர்பான செயற்குறிப்பு இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் மிகப் பழமையான சட்டங்கள் தற்கால சமூக அமைப்பு மாற்றங்கள் தேவைக் கேற்ப மாற்றி அமைக்கப்படுகின்ற வகையில், மீண்டும் புதுப்பிக்கப்படுகின்ற சூழ்நிலையில், அவைகளை ஏற்படுத்துவதற்காக இந்தச் சட்ட ஆணையம் மிக விரைவில் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, the proposed Law Commissions functions are :

(a) to suggest suitable modifications or amendments to plug loopholes existing in the laws ;

(b) to ensure suitable social and economic legislative measures;

(c) to suggest different ways and means for inter-State relations and Centre-State relations;

(d) to make suggestions and recommendations for better and expeditious procedures for the judicial administrative reforms; and

(e) suggest modifications or amendments not only to the State laws but also to the Central laws having application to this State.

அதை அடிப்படையாகக் கொண்டுதான் மாநில Law Commission அமைக்கும் குறிப்பு இருக்கிறது.

1990 ஏப்ரல் 21]

பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தச் சட்டக் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற கோப்பு நகர்த்தப்பட்டு அப்போது முடிவடைந்த நிலையில் இருந்ததாகக் கேள்விப் பட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதை மிக விரைந்து கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற ஒரு சட்ட ஆணையம் மத்திய அரசில் இயங்கி வருகிறது. மற்ற மாநிலங்களில் இதுபோன்று இருக்கிறதா என்பதை நாம் கேட்டோம். அப்படிக் கேட்டபோது, மத்தியப் பிரதேசம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் மாநில சட்ட ஆணையங்கள் அமைக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவைகளைக் கவனத்தில் கொண்டு, நமது மாநிலத்திலும் விரைவாகக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தைப் பிரித்தல்.

* 448 திரு. ரெ. பிச்சைமுத்து:

திரு. எஸ். டி. உகம்சந்த்:

திரு. ஆர். அறிவழகன்:

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரிப்பது குறித்த வல்லுநர் குழுவின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதை ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற வல்லுநர் அறிக்கை அரசுக்கு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் விபரம் என்ன? மாவட்டம் எப்போது பிரிக்கப்படும்? மாவட்டம் பிரிக்கப்படுகின்ற நேரத்தில் பெரம்பலூர் நகரத்தில் அமைய